# அன்பு காட்டுவோம்

(மு. முத்துஜோதி)

(சிறுவர் மலருக்காக எழுதிக் கொடுத்தது)

கொக்கரக்கோ என்று சேவல்

காலை தினமும் கூவுது;

அக்கரையாய் நம்மை வீட்டை

அன்பு நாய் காக்குது;

‘கிக்கீக்கீ’ என்று பாடி

கிளிகளெல்லாம் பறக்குது;

இக்கிளைக்கும் அக்கிளைக்கும்

இரண்டு குரங்கு தாவுது;

வண்ண வண்ண மலர்களெல்லாம்

வாய்மூடிச் சிரிக்குது;

விண்ணை முட்டும் மரங்களெல்லாம்

விதவிதமாய் ஆடுது;

புள்ளிமான் கூட்டமெல்லாம்

புல்லுதின்ன ஓடுது;

கொள்ளை அழகு மயில்களெல்லாம்

கொலுவச்சி ஆடுது;

பூமிதன்னில் உயிர்களெல்லாம்

பூரிப்புடன் வாழ்ந்திட

சாமி செய்த செயலை நாமும்

சீருடனே போற்றுவோம்.

நம்ம தம்பி பாப்பா போல

நாளும் அன்பு காட்டுவோம்

நம்மை தம்பி பாப்பா போல

நாளும் கடவுள் போற்றுவார்…!